salona Cotspin LIMITED

"Shree Sakthi Kunj"
9, Ramalinga Nagar, IV Cross, S.B. Colony,
Coimbatore - 641 011. Tamil Nadu, INDIA
✆ Off : 0422 - 2454415
Email : info@salonagroup.com
Web : www.salonagroup.com

September 01, 2026

To

The Listing Department,
National Stock Exchange of India Limited
Exchange Plaza, Bandra – Kurla Complex,
Bandra (E), Mumbai - 400 051
SYMBOL - SALONA

Dear Sir/Madam

Sub: Copies of Newspaper publication under Regulation 30

Pursuant to provisions of Regulation 30 read with Schedule III of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we enclose herewith the copies of the newspaper advertisement published by the Company in the following newspapers regarding the opening of a special window for re-lodgement of transfer requests for physical shares, in accordance with SEBI Circular No. **HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026** dated January 30, 2026. Securities transferred under this Special Window shall be credited only in demat mode and will be subject to a mandatory lock-in for a period of one year from the date of registration of transfer. During the lock-in period, such securities cannot be transferred, pledged or lien-marked.

i. English – Trinity Mirror
ii. Tamil – Makkal Kural

The above information is available on the website of the Company www.salonacotspin.com.

This is for your information and records.

Yours Truly,

For **Salona Cotspin Limited**

Rajkumari R
Company Secretary & Compliance Officer

SALONA COTSPIN LIMITED COIMBATORE - 641 011

Encl.: as above



3D-printed dental crowns on anvil

The next visit to the dentist for a damaged tooth could one day become significantly faster, with researchers developing a technology that may allow permanent dental crowns to be 3D-printed and fitted within a single appointment.

Scientists at the University of Texas at Dallas have developed a new method that could dramatically reduce the time needed to produce 3D-printed zirconia dental restorations. The advance could eventually enable dentists to create customised, permanent crowns while patients wait, replacing a process that can currently take days or even weeks.

Zirconia is widely regarded as one of the preferred materials for permanent dental restorations because of its strength and durability. However, producing zirconia crowns through 3D printing has faced a major obstacle: the lengthy post-processing required after printing.

A newly printed crown must undergo two crucial stages known as debinding and sintering. During debinding, the resin binding the zirconia particles is removed through controlled heating. The process has traditionally taken between 20 and 100 hours because speeding it up can cause gases to build up inside the material, potentially leading to cracks or fractures.

The Texas researchers have found a way to reduce this critical stage to less than 30 minutes. Their system combines improved heat transfer with porous graphite felt capable of reaching temperatures above 2,550 degrees Fahrenheit. The material surrounds the printed restoration, allowing gases to escape, while a vacuum system removes them from the surrounding area.

Dr. Majid Minary, professor of mechanical engineering at UT Dallas, said the technology could make chairside production of permanent, all-ceramic zirconia restorations possible within a few hours.

The approach could offer greater personalisation because each crown can be digitally designed and printed specifically for an individual patient. It could also reduce waiting time, eliminate or shorten the need for temporary restorations and potentially improve manufacturing efficiency.

The researchers are now working towards commercialising the technology for crowns, bridges, veneers and other dental restorations. The effort has received support through a US National Science Foundation programme and involves collaboration with dental and 3D-printing partners.

However, the technology is not yet ready for routine clinical use. It will require further clinical validation and regulatory approval before becoming commercially available.

If successfully developed for widespread use, the innovation could transform digital dentistry, making the traditional wait for a permanent crown a thing of the past and bringing the prospect of a customised, durable restoration within a single dental visit closer to reality.

Childhood trauma may leave lasting scar inside brain cells

Severe stress during childhood may leave a lasting biological mark inside brain cells, making the brain more sensitive to stress decades later, according to new research that has identified a possible molecular mechanism linking early adversity with vulnerability to anxiety and depression.

Scientists from Washington University School of Medicine in St. Louis and Princeton University studied how early-life stress can produce long-term changes in the developing brain. Their findings, published in the journal Neuron, suggest that childhood adversity can alter the way DNA is packaged inside certain brain cells, leaving stress-related genes more easily activated later in life.

The researchers focused on the ventral tegmental area, a region of the brain containing neurons that produce dopamine, a chemical messenger involved in processing rewards, experiences and adversity. Abnormal activation of these neurons in response to stress can disrupt reward processing and may increase vulnerability to anxiety and depression.

The team examined the epigenome, the collection of molecular tags that helps determine whether genes are switched on or off. DNA is wrapped around proteins called histones, which control how tightly genetic material is packed. When DNA is tightly packed, genes are more difficult to activate. When it becomes more open, genes can respond more readily to environmental signals. In young mice exposed to early-life stress, researchers found higher levels of an enzyme called SETD7 in dopamine-producing neurons. SETD7 adds a chemical marker known as H3K4me1, which encourages the DNA structure to open.

When scientists artificially increased SETD7 levels in young mice that had not experienced stress, the animals later developed more reactive dopamine neurons and showed greater anxiety-like behaviour as adults. Their brain cells also became more sensitive to future stress.

The researchers then tested whether the process could be interrupted. By reducing SETD7 activity after early-life stress, they prevented excessive accumulation of the H3K4me1 marker. The animals remained more resilient, even when exposed to further stress later in life. The findings provide a possible biological explanation for why childhood adversity can have effects that emerge years later. However, the research was conducted in mice, and further studies will be required to determine how directly the mechanism applies to humans.

Scientists said the discovery could provide a specific molecular target for future treatments and also reinforces the importance of supportive care, therapy and social support during sensitive stages of childhood development.



First 2-year diet may shape health decades later

What children eat during their first two years of life may influence their health many decades later, with a new study suggesting that lower exposure to sugar during the first 1,000 days could be associated with a reduced risk of certain cancers, slower biological ageing and healthier dietary habits in adulthood.

The research took advantage of an unusual natural experiment created by Britain's post-Second World War sugar rationing. Sugar remained restricted for several years after the war, but the restrictions ended in September 1953, leading to a sharp rise in consumption.

This change meant that children born only months apart could have experienced significantly different levels of sugar exposure during pregnancy and early childhood. Researchers used data from more than 64,000 people born in Britain between 1951 and 1956 to examine whether these differences were linked to health outcomes later in life.

The first 1,000 days, spanning conception to a child's second birthday, are considered a critical period of development. Organs grow rapidly, metabolism takes shape, the immune system matures and food preferences begin to develop. Nutrition during this stage can therefore have effects that extend well beyond childhood.

The researchers found that people who experienced longer periods of sugar rationing during their first 1,000 days had lower rates of five cancers later in life - breast, prostate, liver, rectal and lung cancer. The strongest association was seen with liver cancer, where rates were about 69 per cent lower, while breast cancer rates were around 36 per cent lower.

The study also found signs of slower biological ageing. Participants exposed to lower sugar levels early in life had longer telomeres, protective structures at the ends of chromosomes that tend to shorten as cells age. The difference was estimated to be equivalent to about 2.2 years of slower biological ageing. They also had lower levels of granzyme B, a protein associated with long-term immune-system activity.

Another notable finding was that early dietary exposure appeared to influence eating habits decades later. Around the age of 50, those who had experienced sugar rationing in early childhood were still consuming less sugar, eating less overall and following healthier and more diverse diets.

Researchers believe both biological and behavioural factors may be involved. Early nutrition could influence the development of metabolism, organs and immunity, while exposure to less sweetness may shape long-lasting taste preferences.

The findings do not mean that children must avoid sugar completely or prove that sugar directly causes cancer. However, they add to growing evidence that nutrition during the earliest stages of life may leave a lasting imprint on health.

For parents and policymakers, the message is simple: the food environment created during a child's first 1,000 days may help shape health and dietary habits for decades to come.

Ultra-processed foods may raise prostate cancer risk

Men who consume large quantities of ultra-processed foods may face a significantly higher risk of developing prostate cancer, according to new research involving more than 17,000 adults in the United States.



The study found that men with higher consumption of ultra-processed foods, including soft drinks, packaged snacks, breakfast cereals and processed meats, had a 24 to 31 per cent greater risk of prostate cancer after researchers accounted for factors such as age, smoking, race, ethnicity and poverty status.

Researchers from Florida Atlantic University's Charles E. Schmidt College of Medicine analysed nationally representative data from 17,024 US men aged 18 years and above who participated in the National Health and Nutrition Examination Survey between 2003 and 2023.

To assess dietary habits, scientists examined two 24-hour food recalls from each participant and calculated the proportion of daily calories obtained from ultra-processed foods. The products were classified using the widely used NOVA food classification system.

Participants were divided into four groups based on their consumption. Those receiving less than about 20 per cent of their daily calories from ultra-processed foods were compared with men whose diets contained progressively higher proportions.

The findings showed that men in the three higher-consumption groups had a 29 per cent greater risk of prostate cancer than those with the lowest intake. The risk was about 30 per cent higher among men in the two highest consumption groups.

The researchers noted that the association remained significant even after accounting for several other factors that could influence cancer risk. Men in the single highest consumption group showed a possible 34 per cent increase, although this result did not reach statistical significance.

Ultra-processed foods now account for a substantial share of diets in many countries. Such products are typically manufactured using refined fats, oils, sugars, starches, salt and additives intended to improve flavour, texture and shelf life, often while reducing nutritional quality.

Scientists have previously linked greater consumption of these foods with obesity, metabolic disorders, inflammation, cardiovascular disease and premature death. Possible mechanisms include disturbances in metabolism, increased inflammation and oxidative stress, and changes in the gut microbiome.

The researchers stressed that the study establishes an association and does not prove that ultra-processed foods directly cause prostate cancer. Further large observational studies and clinical research will be needed to examine the relationship more closely.

Nevertheless, the findings add to growing concern about diets heavily dependent on highly processed products. The researchers said reducing their consumption while improving access to nutritious, minimally processed foods could form an important part of broader efforts to promote healthier lifestyles and reduce the burden of chronic disease.

Common medicines may alter gut bacteria for years

Medicines taken months or even years ago may continue to influence the bacteria living in the human gut, according to a major new study that suggests a person's medical history could be an important factor in understanding their microbiome.

Researchers analysed stool samples and prescription records from more than 2,500 participants in the Estonian Biobank's microbiome cohort and found that many commonly used medicines were associated with lasting changes in gut microbial communities.

The gut microbiome consists of billions of bacteria and other microorganisms living in the digestive system. These microbes play an important role in digestion, metabolism and immune function, and scientists are increasingly studying their possible links with a wide range of diseases. While antibiotics are already known to disrupt gut bacteria, the new research found that the effects were not limited to these medicines. Antidepressants, beta-blockers, acid-reducing drugs known as proton pump inhibitors and benzodiazepines were also associated with distinctive microbial patterns that, in some cases, could still be detected years after treatment had ended.

The findings suggest that researchers studying the microbiome may need to consider not only medicines currently being taken by participants but also their past prescription history.

One particularly striking result involved benzodiazepines, medicines commonly prescribed for anxiety and related conditions. Their association with changes in gut bacteria was comparable to the effects seen with broad-spectrum antibiotics, which can affect many different types of bacteria.

The study also showed that medicines belonging to the same drug category did not necessarily affect the microbiome in identical ways. For example, diazepam and alprazolam, both benzodiazepines, appeared to differ in the strength of their association with changes in gut microbes.

Researchers also examined follow-up samples from a smaller group of participants to observe changes when people started or stopped certain medicines. These samples showed predictable shifts in microbial communities, strengthening evidence that medication use itself may contribute to some of the differences observed.

Persistent effects were identified in connection with proton pump inhibitors, selective serotonin reuptake inhibitors, a commonly used group of antidepressants, and certain antibiotics.

The researchers said the findings could have important implications for future studies linking the microbiome with disease. Without information about medicines taken years earlier, scientists may mistakenly attribute some microbial changes to a disease rather than to past treatment.

The study does not suggest that people should stop taking prescribed medicines. Instead, it highlights the importance of medication history when interpreting microbiome research and understanding the complex factors that shape the bacteria people carry in their gut.

The findings add to evidence that the gut microbiome may reflect not only current diet and lifestyle, but also biological traces of treatments received long ago.

Turmeric compound may protect diabetic blood vessels

A natural compound found in turmeric may help protect blood vessels from some of the damage associated with Type 1 diabetes, according to new research in rats. The findings suggest that curcumin, the compound responsible for turmeric's bright yellow colour, could eventually contribute to strategies aimed at reducing cardiovascular complications linked to diabetes.

The study focused on curcumin, which has attracted scientific interest because of its anti-inflammatory and antioxidant properties. Researchers examined a rat model of Type 1 diabetes and compared diabetic animals treated with curcumin with diabetic rats that did not receive the compound.

The findings were presented at the 2026 American Physiology Summit in Minneapolis.

After one month of treatment, diabetic rats given curcumin showed improvements in blood-vessel function that were closer to those seen in non-diabetic animals. Researchers found evidence that the compound reduced inflammation and improved cellular processes important for maintaining healthy blood vessels.

A key finding involved calcium signalling within vascular cells. Calcium helps regulate the contraction and relaxation of blood vessels, but diabetes can interfere with this process and contribute to abnormal vascular function. Curcumin appeared to restore more normal calcium activity in the diabetic rats.

The researchers also observed changes in heat shock protein 70, which plays an important role in protecting cells and regulating vascular responses. Diabetes can disturb the normal balance of this protein, potentially contributing to inflammation and structural damage.

Together, the results suggest that curcumin may help slow some of the structural and functional deterioration of blood vessels caused by diabetes, potentially reducing long-term cardiovascular risks.

SALONA COTSPIN LIMITED

CIN - L17111TZ1994PLC004797

Registered Office : SF NO 74/12 & 75/3, Sathy Road, Pungampalli Village, Sathyamangalam – 638402

Website – www.salonacotspin.com, Phone – 0422-2454415

SPECIAL WINDOW FOR RE-LODGEMENT OF TRANSFER REQUEST OF PHYSICAL SHARES

Pursuant to SEBI Circular No. HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026 dated January 30, 2026, Shareholders are informed that a Special Window has been opened for a period of one year from February 5,2026 to February 04, 2027, for the re-lodgement of transfer requests for physical share certificates. The facility is applicable to cases which were lodged prior to deadline of April 01, 2019, and the original share transfer were rejected/ returned/not attended due to deficiencies in documents or process or otherwise. The shares re-lodged for transfer will be processed only in dematerialized form during this window. Eligible shareholders may submit their transfer request along with the requisite documents to MUFG Intime India Private Limited, Company's Registrar and Share Transfer Agent ("RTA").

The details of the above Campaign and procedure for updation / registration of KYC Details are made available at Company's website https://www.salonacotspin.com/investors/

Registrar & Share Transfer Agent:
MUFG Intime India Private Limited
Address: Surya, 35, Mayflower Avenue, Behind Senthil Nagar, Sowripalayam Road, Coimbatore – 641028, Tamil Nadu.
E-mail : coimbatore@in.mpms.mufg.com, Phone: 0422-4958995, 2539835

For **Salona Cotspin Limited**
Sd/-
Rajkumari R
Company Secretary

Place : Coimbatore
Date : September 01, 2026



கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

4,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு: அமைச்சர்கள் கீர்த்தனா, அருண்ராஜ் தகவல்

கிருஷ்ணகிரி, செப். 1– கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 4,000 இளைஞர்களுக்கு அல்ட்ரா வயலட் நிறுவனம் மூலம் வேலைவாய்ப்பு வழங்கப்பட உள்ளதாக தொழில் துறை அமைச்சர் ச.கீர்த்தனா தெரிவித்தார். மேலும், கர்ப்பிணிகள் வீட்டில் பிரசவம் செய்வதை முற்றிலும் தவிர்த்து, அரசு அல்லது தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே பிரசவம் மேற்கொள்ள வேண்டும் என மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கோ.க.அருண்ராஜ் அறிவுறுத்தினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் அஞ்செட்டி அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் கர்ப்பிணிகளுக்கான சமுதாய வளைகாப்பு விழா மற்றும் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ரூ.5.70 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட 8 சுகாதாரக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டதுடன், 363 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

அமைச்சர் ச.கீர்த்தனா பேசுகையில், சென்னையில் நடைபெற்ற வெற்றி மாநாட்டில் ரூ.1 லட்சம் கோடி முதலீட்டில் ஒரு லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 4,000 இளைஞர்களுக்கு அல்ட்ரா வயலட் நிறுவனம் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்க உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், கே.ஆர்.பி. அணைப் பகுதியில் ரூ.9 கோடி மதிப்பில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

அமைச்சர் கோ.க.அருண்ராஜ் பேசுகையில், அஞ்செட்டி மலைப்பகுதியைச் சேர்ந்த 500 கர்ப்பிணிகளுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தப்பட்டதாக தெரிவித்தார்.

கர்ப்பிணிகள் பிரசவத்தை அரசு மருத்துவமனை அல்லது தங்களது வசதிக்கேற்ப தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். வீட்டில் பிரசவம் செய்வதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அரசு மருத்துவமனைகளில் பிரசவத்துக்குத் தேவையான மருத்துவச் சேவைகள் இலவசமாகவும், தரமாகவும் வழங்கப்படுகின்றன. கர்ப்பிணிகள் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் வழங்கும் ஆலோசனைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் 100 பேருக்கு ரூ.1.50 லட்சம் மதிப்பிலான இலவச கண் கண்ணாடிகள், காசநோயால் பாதிக்கப்பட்ட 100 பேருக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள், 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.8.37 லட்சம் மதிப்பிலான செயற்கை உறுப்புகள், 100 பேருக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டன. மேலும், அஞ்செட்டி பகுதியைச் சேர்ந்த 18 வயதுக்குட்பட்ட 3 நீரிழிவு நோயாளிகளுக்கு இலவச இன்சுலின் வழங்கப்பட்டது.

பொது சுகாதாரத் துறை சார்பில் காவேரிப்பட்டணம், பர்கூர், மத்தூர், ஓசூர், சூளகிரி, தளி, கெலமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார பொது சுகாதார அலகுகள், துணை சுகாதார நிலையம் மற்றும் ஒருங்கிணைந்த துணை சேவை மையம் உள்ளிட்ட 8 கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

மேலும், டாடா எலக்ட்ரானிக்ஸ் மற்றும் மைலான் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதியின் கீழ் உரிகம், கோட்டையூர், நாகமங்கலம், அஞ்செட்டி ஆகிய பகுதிகளில் ரூ.1.68 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து, தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் காய்ச்சல் சிறப்புப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் பொது சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை அமைச்சர் ஆய்வு செய்தார். கக்கதாசம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மருத்துவச் சிகிச்சைகள் மற்றும் மருத்துவ வளாகத்தை அவர் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் சத்யபாமா, இணை இயக்குநர் மோகனபானு, மாவட்ட சுகாதார அலுவலர் அஜிதா, துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆனந்தராஜ், வட்டார மருத்துவ அலுவலர் சச்சரிதா தேவனாம் பிரியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கௌமார சமய முருக வழிபாட்டு நூல்களை ஆய்வாளர்கள் கண்டறிய வேண்டும்: எஸ்.டி.குமார் பேச்சு

சேலம், செப். 1– உலக முருக பக்தர்கள் சேவா சங்கம் சார்பில் சேலம் தமிழ்ச் சங்க அரங்கில் முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவுக்கு சேவா சங்கத் தலைவர் கோட்டீஸ்வரன் தலைமை வகித்தார். தவெக சேலம் வடக்கு சட்டப்பேரவை உறுப்பினர் கே.சிவக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெங்களூரு திருவள்ளுவர் சங்கத் தலைவரும், தாய்மொழிக் கூட்டமைப்பின் தலைவருமான எஸ்.டி.குமார், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் உருவப் படத்தைத் திறந்து வைத்து பேசினார்.

முருக பக்தரும், அருளாளரும், தமிழ் துறவியுமான ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமான் மீது கொண்டிருந்த தீராத பக்தியின் காரணமாக 6,666 பாடல்களை இயற்றியுள்ளார்.

அவற்றில் தமிழ் இலக்கண மரபுப்படி 130க்கும் மேற்பட்ட வடிவங்களில் முருகப் பெருமானைப் பாடிப் பெருமைப்படுத்தியுள்ளார். அவரது உருவப் படத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்பு கிடைத்ததை வாழ்நாளில் பெற்ற பெரும் பேரின்பமாகக் கருதுகிறேன். இந்த வாய்ப்பை வழங்கிய உலக முருக பக்தர்கள் சேவா சங்க நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

மேலும் அவர் பேசியதாவது:

ஆறு சமயப் பிரிவுகளை உள்ளடக்கிய இந்து சமயத்தில் வைணவம் திருமாலின் அவதாரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சௌரம் சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்குகிறது. சாக்தம் பெண் தெய்வங்களை முதன்மையாகக் கொண்டு உள்ளது.

சைவ சமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டிருந்தாலும், விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்ட காணாபத்தியம், முருகப் பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட கௌமாரம் உள்ளிட்ட சமயப் பிரிவுகளையும் தன்னுள் இணைத்துக் கொண்டுள்ளது.

கௌமார சமயம் சைவ மரபுடன் இணைந்திருந்தாலும், 'குமார தந்திரம்', 'ஸ்கந்த சத்பவ தந்திரம்' போன்ற பழைமையான நூல்கள் கௌமார சமயத்தின் கோட்பாடுகளை உள்ளடக்கியதாக உள்ளன.

'குமார தந்திரம்'

முருகப் பெருமானின் நித்திய பூஜை குறித்து 3,483 பாடல்களைக் கொண்டதாக 'குமார தந்திரம்' நூல் விளங்குகிறது.

முருக பக்தர்கள் முழுமையாகப் பயனடையும் வகையில் தந்திரம், மந்திரம், யந்திரம் மற்றும் சடங்கு வழிபாட்டு முறைகள், முருகப் பெருமானுக்கான நித்திய, நைமித்திக, காமிய வழிபாடுகள், கோயில் வழிபாடு, தனிநபர் வழிபாடு, 16 தியான வடிவங்களுக்கான மந்திர முறைகள் உள்ளிட்டவை குறித்து இந்நூல் விளக்குகிறது.

மேலும், யந்திரங்களை தத்துவ அடிப்படையில் எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதையும் நூல் எடுத்துரைக்கிறது. சுமார் 40 படலங்கள் மற்றும் 40 தலைப்புகளில் மந்திரம், தந்திரம், பிரதிஷ்டை, உருவ அமைப்பு விதிகள், திருவிழா முறைகள், கோயில்களில் மேற்கொள்ள வேண்டிய சடங்குகள் மற்றும் சாத்திர விதிகள் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. எனவே, கௌமார சமயக் கோட்பாடுகளுக்கு 'குமார தந்திரம்' முக்கிய நூலாக விளங்குகிறது.

'குமார தந்திரம்', 'ஸ்கந்த சத்பவ தந்திரம்' ஆகிய நூல்கள் சமஸ்கிருத கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. தூய தமிழில் முருகப் பெருமானுக்குரிய வழிபாட்டு நூல்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால், அவை காலப்போக்கில் அழிக்கப் பட்டிருக்கலாம் அல்லது ஆற்று வெள்ளத்தில் விடப்பட்டிருக்கலாம்.

தமிழ் நூல்களை சமஸ்கிருத கிரந்த எழுத்தில் எழுதியபோது, தமிழ் கடவுளான முருகனின் வழிபாட்டு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு இடைச்செருகல்கள் மற்றும் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது. இருப்பினும், 'குமார தந்திரம்' நூலில் முருக வழிபாட்டின் மூலக்கூறுகள் உள்ளன என்பதை உறுதியாக நம்பலாம்.

ஓலைச்சுவடிகள்

நமது கௌமார சமயம் சைவ, வேத மரபுகளுக்கு முந்தைய குலதெய்வ வழிபாட்டு மரபுடன் தொடர்புடையது என்பதை தொல்காப்பியத்தில் இடம்பெறும் சேயோன் குறிப்பு மற்றும் சங்க கால நூலான திருமுருகாற்றுப்படையில் காணப்படும் முருக வழிபாட்டு முறைகள் மூலம் அறிய முடிகிறது.

புராண காலத்தில் திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தர் அந்தாதி, கந்த சஷ்டி கவசம், கந்த குரு கவசம், கந்தபுராணம், சுப்பிரமணிய புஜங்கம் உள்ளிட்ட பல்வேறு நூல்கள் முருகப் பெருமானின் சிறப்பையும் அருளையும் எடுத்துரைக்கின்றன.

2023ம் ஆண்டு பழனி தண்டாயுத பாணி திருக்கோயில் வெளியீடாக, அல்லூர் சிவஸ்ரீ விஸ்வநாத சிவாச்சாரியாரின் பெருமுயற்சியால் 'குமார தந்திரம்' நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு வெளிவந்துள்ளது. அந்த நூலைத் தமிழறிந்த அர்ச்சகர்களுக்கு இலவசமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும், சங்க காலத்துக்கும் புராண காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்த முருக வழிபாட்டு நூல்களை ஆய்வாளர்கள் கண்டறிய முன்வர வேண்டும்.

உ.வே.சாமிநாதையரின் பெருமுயற்சியால் சங்க இலக்கியங்கள் நமக்குக் கிடைத்தன. அதுபோல, முறையான முருக வழிபாட்டு ஓலைச்சுவடிகள் தமிழ் மண்ணில் எங்காவது இருக்கக்கூடும். எனவே, மனம் தளராமல் அவற்றைத் தேடிக் கண்டறிய ஆய்வாளர்கள் முன்வர வேண்டும் என்றார்.



ஊர்க்காவல் படை கோவை சரக விளையாட்டுப் போட்டிகள்

கோவை, செப். 1– தமிழ்நாடு ஊர்க்காவல் படை கோவை சரக அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கோவை யுனைடெட் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றன.

தமிழ்நாடு காவல் துறையின் ஒரு அங்கமாக செயல்பட்டு வரும் ஊர்க்காவல் படையினர், இரவு பகல் பாராது காவல் துறையினருடன் இணைந்து பல்வேறு பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு புத்துணர்வு அளிக்கும் வகையில் ஆண்டுதோறும் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு ஊர்க்காவல் படை கோவை சரக தளபதி தனசேகர் தலைமையில் சரக அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. கோவை மாவட்ட ஊர்க்காவல் படை பிரதேச தளபதி சண்முகம் சேர்மன் மற்றும் யுனைடெட் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

கோவை சரகத்துக்கு உட்பட்ட கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய 4 மாவட்டங்களைச் சேர்ந்த ஊர்க்காவல் படை வீரர், வீராங்கனைகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இதில் 50 மீட்டர், 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப் போட்டிகள், 400 மீட்டர் தொடர் ஓட்டம், குண்டு எறிதல், நீளம் தாண்டுதல், கைப்பந்து, கபடி உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளில் தேர்வு செய்யப்படும் வீரர், வீராங்கனைகள், அடுத்த மாதம் தேனியில் நடைபெற உள்ள மாநில அளவிலான ஊர்க்காவல் படையினருக்கான விளையாட்டுப் போட்டிகளில் கோவை சரகம் சார்பில் பங்கேற்க உள்ளனர்.

கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த ஊர்க்காவல் படை பிரதேச தளபதிகள், துணை பிரதேச தளபதிகள், படைத் தளபதிகள், காவல் சார்பு ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தர்கள் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 250 பேர் போட்டிகளில் பங்கேற்றனர். போட்டிகளுக்கான ஏற்பாடுகளை யுனைடெட் கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்கள் ஒருங்கிணைத்தனர்.

நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட பிரதேச தளபதி பிரசன்னா, திருப்பூர் மாநகர பிரதேச தளபதி பண்பரசு, திருப்பூர் மாவட்ட பிரதேச தளபதி மனோகரன், துணை பிரதேச தளபதிகள் கார்த்திகேயன், ஜெயபால், நித்யா, ஹரிகோபாலன், தேன்மொழி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிறைவில், கோவை மாவட்ட ஊர்க்காவல் படை படைத் தளபதி ஜெய்குமார் நன்றி கூறினார்.

பரதநாட்டிய சேவைக்காக சிறுமுகை ஆசிரியை பிருந்தா குமாரிக்கு டாக்டர் பட்டம்

கோவை, செப். 1– பரதநாட்டியக் கலையை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்து வரும் சிறுமுகை ஸ்ரீ கிருஷ்ணா நாட்டியாலயா பள்ளியின் ஆசிரியை பிருந்தா குமாரிக்கு, அவரது கலைச் சேவையைப் பாராட்டி கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

சிறுமுகையில் செயல்பட்டு வரும் ஸ்ரீ கிருஷ்ணா நாட்டியாலயா பள்ளி கடந்த 20 ஆண்டுகளாக மாணவிகளுக்கு பரதநாட்டியக் கலையை கற்றுக் கொடுத்து வருகிறது. மாணவிகளுக்கான சலங்கை பூஜை, அரங்கேற்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதுடன், பள்ளி, கல்லூரிகளிலும் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. வசதியற்ற குழந்தைகளுக்கு இலவசமாக பரதநாட்டியம் கற்றுக் கொடுத்து வரும் பிருந்தா குமாரி, நாட்டின் பாரம்பரியக் கலையான பரதநாட்டியத்தை மாணவர்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறார்.

அவரது கலைச் சேவையைப் பாராட்டி ஆசியா இன்டர்நேஷனல் கல்சுரல் அகாடமி சார்பில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

ஓசூரில் நடைபெற்ற விழாவில் அகில இந்திய ஐஎன்டிசி தொழிற்சங்க பொதுச் செயலாளர் மனோகர், கிருஷ்ணமூர்த்தி மகா சுவாமிகள், சமூக சேவகர் மனோஜ், சர்வதேச மற்றும் தேசிய விருதாளர் கங்கனா பாசப்பா பிரதார், உலக சாதனையாளர் அருண் சின்னத்துரை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தைச் சேர்ந்த கதிர்வேல் உள்ளிட்டோர் பங்கேற்று, இயல், இசை, நாடகத் துறையில் சிறப்பாகப் பணியாற்றி வரும் பிருந்தா குமாரியைப் பாராட்டினர்.



Fenesta Better by Design
India's No.1 Windows & Doors Brand

PUBLIC NOTICE

Notice is hereby served to all concerned that our dealership operating under the name of **"SHANKAR TIMBER MART"** located at **METTUPALAYAM ROAD, NEAR ERU COMPANY, 178C, BUS STOP, COIMBATORE 641043** is discontinued w.e.f. 20.08.2026. FBS has terminated its dealership with **"SHANKAR TIMBER MART"** and the latter has already ceased to be an authorized dealer of FBS. Therefore, is no longer associated in any way with Fenesta Building System ("FBS"), a division of DCM Shriram Limited.

Any person dealing with "SHANKAR TIMBER MART" will be doing so at his or her own risk and consequences. Thus, FBS will not be liable or responsible for dealing of any person with "SHANKAR TIMBER MART" in any event and for any reason whatsoever.

"SHANKAR TIMBER MART" and/or its owners/employees have no authority to transact any business or receive any money for and on behalf of FBS without consent of the FBS. FBS shall not be responsible for any action, debt, commitment or deeds done or entered into by **"SHANKAR TIMBER MART"**.

For any queries related to your pending order etc, kindly contact Fenesta Building Systems. FBS Helpline Tel: 0124-4513700 & 1800 102 9880 or email us at response@fenesta.com.

அதிக வட்டி, லாபம் தருவதாகக் கூறும் அங்கீகாரமற்ற முதலீட்டுத் திட்டங்களில் பணத்தை முதலீடு செய்ய வேண்டாம்

கிருஷ்ணகிரி, செப். 1– அதிக வட்டி, அதிக லாபம், முதலீட்டுத் தொகை இரட்டிப்பு, மாதந்தோறும் அதிக வருமானம் கிடைக்கும் என கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அளிக்கும் அங்கீகாரமற்ற முதலீடு மற்றும் வைப்புத் திட்டங்களில் பொதுமக்கள் பணத்தை முதலீடு செய்ய வேண்டாம் என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பணத்தைப் பெற்று, குறுகிய காலத்தில் அதிக வட்டி அல்லது அதிக லாபம் கிடைக்கும் எனக் கூறி செயல்படும் அங்கீகாரமற்ற நபர்கள், நிறுவனங்கள் மற்றும் நிதித் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

ஒழுங்குமுறைப்படுத்தப்படாத வைப்புத் திட்டங்களைத் தடை செய்யும்சட்டம், 2019ன்கீழ், சட்டப்படி ஒழுங்குமுறைப்படுத்தப்படாத வைப்புத் திட்டங்களை நடத்துதல், விளம்பரப்படுத்துதல், பொதுமக்களை அதில் சேருமாறு அழைத்தல் மற்றும் அத்தகைய திட்டங்களின் கீழ் பணத்தை வைப்பாகப் பெறுதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

மேலும், அதிக வட்டி அல்லது அதிக லாபம் கிடைக்கும் என பொய்யான, தவறான அல்லது ஏமாற்றும் வாக்குறுதிகளை அளித்து பொதுமக்களை அங்கீகாரமற்ற திட்டங்களில் முதலீடு செய்யத் தூண்டுவதும் சட்டப்படி குற்றமாகும்.

எனவே, பொதுமக்கள் தங்களது சேமிப்புப் பணத்தை முதலீடு செய்வதற்கு முன்பு, சம்பந்தப்பட்ட வங்கி, நிதி நிறுவனம் அல்லது முதலீட்டுத் திட்டம் இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ), இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி) அல்லது சம்பந்தப்பட்ட சட்டபூர்வ ஒழுங்குமுறை அமைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும், பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுவதற்கு உரிய அனுமதி பெற்றுள்ளதா என்பதையும் கட்டாயம் சரிபார்க்க வேண்டும்.

குறிப்பாக, "உங்கள் பணம் சில மாதங்களில் இரட்டிப்பாகும்", "அதிக வட்டி அல்லது அதிக லாபம் வழங்கப்படும்" எனக் கூறும் அங்கீகாரமற்ற முதலீடு மற்றும் வைப்புத் திட்டங்களை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என கலெக்டர் அறிவுறுத்தியுள்ளார்.

SALONA COTSPIN LIMITED

CIN - L17111TZ1994PLC004797

Registered Office : SF NO 74/12 & 75/3, Sathy Road, Pungampalli Village, Sathyamangalam – 638402

Website – www.salonacotspin.com, Phone – 0422-2454415

பௌதீகப் பங்குச் சான்றிதழ்களைப் பரிமாற்றம் செய்வதற்கான கோரிக்கைகளை மறுசமர்ப்பிப்பதற்கான சிறப்புச் சாளரம்

2026 ஜனவரி 30 தேதியிட்ட SEBI சுற்றறிக்கை எண். HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026-இன் படி, பௌதீகப் பங்குச் சான்றிதழ்களைப் பரிமாற்றம் செய்வதற்கான கோரிக்கைகளை மறுசமர்ப்பிப்பதற்காக, 2026 பிப்ரவரி 5 முதல் 2027 பிப்ரவரி 4 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஒரு 'சிறப்புச் சாளரம்' (Special Window) திறக்கப்பட்டுள்ளது என்று பங்குதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. 2019 ஏப்ரல் 1 என்ற காலக்கெடுவிற்கு முன்னதாகவே சமர்ப்பிக்கப்பட்டு, ஆவணங்கள் அல்லது செயல்முறையில் இருந்த குறைபாடுகள் காரணமாகவோ அல்லது பிற காரணங்களினாலோ நிராகரிக்கப்பட்ட/திரும்ப அனுப்பப்பட்ட/கவனிக்கப்படாமல் விடப்பட்ட பரிமாற்றக் கோரிக்கைகளுக்கு மட்டுமே இச்சலுகை பொருந்தும். இச்சிறப்புச் சாளரக் காலத்தில், பரிமாற்றத்திற்காக மறுசமர்ப்பிக்கப்படும் பங்குகள் அனைத்தும் 'டிமெட்டீரியலைஸ்டு' (மின்னணு) வடிவில் மட்டுமே செயலாக்கப்படும். தகுதியுள்ள பங்குதாரர்கள் தங்கள் பரிமாற்றக் கோரிக்கையையும், அதற்கான தேவையான ஆவணங்களையும், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்குப் பரிமாற்ற முகவரான ("RTA"). MUFG Intime India Private Limited-இடம் சமர்ப்பிக்கலாம்.

பதிவாளர் & பங்கு பரிமாற்ற முகவர்: MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்
முகவரி: சூர்யா, 35, மேஃப்ளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்புறம், சௌரிபாளையம் சாலை, கோயம்புத்தூர்–641028, தமிழ்நாடு.
மின்னஞ்சல்: coimbatore@in.mpms.mufg.com, தொலைபேசி: 0422-4958995, 2539835

சலோனா காட்ஸ்பின் லிமிடெட்டுக்காக
Sd/-
ராஜ்குமாரி ரா
நிறுவன செயலாளர்

இடம் : கோயம்புத்தூர்
தேதி : செப்டம்பர் 01, 2026